செ.வெ.எண்:45 நாள்:26.07.2021

# பத்திரிக்கை செய்தி

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் கழக நவீன அரிசி ஆலைகள் மற்றும் கழகத்தில் அரவை முகவர்களாக உள்ள தனியார் அரவை ஆலைகள் மூலம் அரவை செய்து பொதுவிநியோக திட்டத்திற்கு அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மண்டலத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அரவை செய்து பொதுவிநியோக திட்டத்திற்கு அரிசி வழங்குவதற்கு ஏதுவாக Paddy Precleaner, Mechanical Dryer, Modern Par-boiling unit, Cone Polishers, Whiteners, Colour Sorter, Storage Godown, etc., உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் கொண்ட இம்மண்டலத்தில் உள்ள தனியார் அரவை ஆலை உரிமையாளர்களிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் புழுங்கல் அரிசி அரவை முகவராக நியமனம் செய்வது தொடர்பான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு முதுநிலை மண்டல மேலாளர் நாகப்பட்டினம் அவர்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**